**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 175** **நாள்: 21.11.2017**

**டாக்டர்.இராதாகிருஷ்ணன் சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்ட பட்டியல், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படவுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தால் உத்தரவிடப்பட்டு கடந்த 03.10.2017 முதல் 30.11.2017 வரை சிறப்பு சுருக்க முறை திருத்தம்–2018 நடைபெற்று வருகிறது. அதன் பொருட்டு, சென்னை மாவட்டத்திற்குள்ளடங்கிய 16 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 03.10.2017 அன்று வெளியிடப்பட்டது.

மேற்படி வாக்காளர் பட்டியலில் இடம் பெயர்ந்த, இறந்த மற்றும் இருமுறை இடம்பெற்ற வாக்காளர் தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) மூலம் முதற்கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையின் மூலம் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 1,82,540 வாக்காளர்களின் பெயர்கள் நீக்குவதற்காக அடையாளம் காணப்பட்டது. அதில் தற்பொழுது வரை மொத்தம் 1,03,896 வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

அதில் குறிப்பாக எண் 11. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் பதவி காலியாக இருப்பதனால், எதிர்வரும் இடைத்தேர்தலை முன்னிட்டு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வாக்குச்சாவடி நிலை அலுவலர் மற்றும் மேற்பார்வையாளர் மூலம் சுமார் 49,407 வாக்காளர்களின் பெயர்கள் நீக்க அடையாளம் காணப்பட்டது. ஏற்கனவே சில அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரால் வாக்காளர் பட்டியலில் நீக்கம் செய்ய கோரி அளிக்கப்பட்ட இனங்களும் இதில் அடங்கும்.

எனவே, மீண்டும் 100 சதவிகித களவிசாரணை, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது 38,319 இடம்பெயர்ந்த (Shifted), 3,818 இறந்த (Dead) மற்றும் 3,682 இருமுறை இடம்பெற்ற (Duplicate)ஆக மொத்தம் 45,819 வாக்காளர்களின் பெயர்கள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அறிவிக்கை சார்பு செய்யப்பட்டு பின்பு நீக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு நீக்கப்பட்ட வாக்காளர்களின் பட்டியல் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு வழங்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**